| O.S.No. 08/2023 | PW1 : திருமதி. பச்சையம்மாள்<br>க/பெ. திரு. செல்வராஜ் | 07-04-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>5, 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. 1-ம் பிரதிவாதி என் தம்பி. 2 முதல் 4 பிரதிவாதிகள் என் மற்றொரு தம்பி கோவிந்தராஜனின் வாரிசுகள். 5-ம் பிரதிவாதி பெருமாள் என் கணவரின் அண்ணன் மகன். வழக்கு சொத்துக்கள் ஆதியில் முத்துப்பிள்ளைக்கு சொந்தமானது ஆகும். என் தந்தை வழக்கு சொத்துக்களை பொறுத்து 1-ம் பிரதிவாதிக்கும், 5-ம் பிரதிவாதிக்கும் ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் இல்லை. என் தந்தை 1, 5 பிரதிவாதிகளுக்கு 2005-ம் ஆண்டிலேயே தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துவிட்டார் என்றாலும், நான் வழக்கிற்காக இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. என் தந்தை 1, 5 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்துவிட்டதால்தான் என் தந்தையின் இறப்பிற்கும், காரியத்திற்கும் நான் செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாயாரும், தந்தையும் இறக்கும் வரையில் 1-ம் பிரதிவாதி மூர்த்தி வீட்டில்தான் இருந்து வந்தார் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி மூர்த்திதான் என் தாய், தந்தையருக்கு கடைசி வரை அடிப்படை தேவைகள் மற்றும் சவரட்சணைகளை செய்து வந்தார் என்றால் சரிதான். சொத்துக்கான பட்டாவை மூர்த்தியும், கோவிந்தராஜூம் அவர்கள் பெயரில் பட்டா மாற்றிக்கொண்டார்கள் என்றால் எங்களுடைய அனுமதி இல்லாமல் அவர்கள் மாற்றி இருக்க முடியாது.

3. அவ்வாறு 1-ம் பிரதிவாதி அனுபவித்து வந்த சொத்தினை 5-ம் பிரதிவாதிக்கு 6½ சென்ட்டும், 6-ம் பிரதிவாதிக்கு 15 சென்ட்டும், 2011-ம் ஆண்டு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். 5-ம் பிரதிவாதி பெருமாள் அந்த இடத்தை வாங்கியதற்கு பிறகு 2012-ம் ஆண்டில் வீடு கட்டுவதற்கு கடக்கால் போட்டார் என்றால் சரிதான். அந்த வீட்டினை கட்டும் வரையில் நானும், என் கணவரும் அந்த வீட்டிற்காக வேலை செய்தோம் என்றால்

சரியல்ல, பழைய வீடு கட்டுவதற்குத்தான் நானும், என் கணவரும் வேலை செய்தோம். எங்களது பழைய வீடும், 5-ம் பிரதிவாதி பெருமாளின் பழைய வீடும் பக்கத்து பக்கத்து வீடுகள் என்றால் சரிதான். அந்த பழைய வீட்டில் இருக்க இடம் பத்தாததால் 5-ம் பிரதிவாதி தாவா சொத்தினை வாங்கி அங்கு வீடு கட்டினார் என்றால் சரிதான்.

4. 5-ம் பிரதிவாதி வீடு கட்டி பால் காய்ச்சியதற்கு நான் சென்றேன். அதே தேதியில் 2016-ம் ஆண்டு 5-ம் பிரதிவாதி அவருடைய குழந்தைகளுக்கு காது குத்தினார். அதற்கு நானும், என் கணவரும், துணிமணிகள் எடுத்துக்கொடுத்து செலவு செய்தோம் என்றால் சரிதான். 5-ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் அந்த நிகழ்வில் சரிவர கலந்துகொள்ளாததால் நானும், என் கணவரும் முன்நின்று அந்த விழாவினை நடத்திக்கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த விழாவின் பத்திரிக்கையில் சிறிய பாட்டனார் என்ற முறையில் வாதியின் பெயரும், எனது பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

5. நான் பழைய வீட்டிலிருந்து தாவா சொத்து இருக்கும் இடத்திற்கு 4 வீடுகள் தள்ளி அந்த இடத்தில் ஒரு மனை வாங்கி வீடடு கட்டி குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த வீடு கட்டுவதற்கு 5-ம் பிரதிவாதிதான் முன்நின்று செலவு செய்தார் என்று சொன்னால் சரிதான், ஆனால் அவர் செலவு செய்த பணத்தை நான் திருப்பி கொடுத்துவிட்டேன். அந்த வீட்டு கிரகப்பிரவேசத்திற்கு 5-ம் பிரதிவாதி ஃபிரிட்ஜ் கொடுத்தார். 2018-ம் ஆண்டிலேயே நான் வீடு கட்டி வந்துவிட்டேன்.

6. 6-ம் பிரதிவாதி முருகன் அவர் வாங்கிய 15 சென்ட்டில் வீடு கட்டி அந்த இடத்திற்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். 5, 6 பிரதிவாதிகள் கிரயம் வாங்கிய விவரம் எனக்கு 2016-ம் ஆண்டிலேயே தெரியும் என்று சொன்னால் சரிதான். அந்த சமயத்தில் நான் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 பட்டாவில் என் பெயர் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்திலும் எனது பெயர் இல்லை

என்றால் சரிதான். வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்களுக்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தினை எந்த காலத்திலும் நான் கூட்டாக அனுபவித்து வந்ததில்லை என்றால் சரிதான்.

7. எனக்கும், 5, 6 பிரதிவாதிகளுக்கும் மனை வாங்கியதை தவிர வேறு எந்த பிரச்சனையும் இல்லை. கையெழுத்து வாங்கிய பிரச்சனை எந்த ஆண்டு ஏற்பட்டது என்று ஞாபகமில்லை. தாவா சொத்தினை 5, 6 பிரதிவாதிகள் அளவீடு செய்யும்போது பிரச்சனை ஏற்பட்டது என்றும், அப்போதுதான் அவர்கள் கிரயம் பெற்ற விஷயம் தெரியும் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கான வியாஜ்ஜியமூலம், சட்டப்பிரிவு தவறு என்றால் சரியல்ல.

8. 5, 6 பிரதிவாதிகள் சரியாய மறுபயனுக்கு 1-ம் பிரதிவாதியிடம் தாவா 1-வது அயிட்ட சொத்தினை கிரயம் பெற்றுள்ளார்கள் என்றாலும், அந்த கிரய பத்திரங்கள் சட்டப்படி செல்லக்கூடியது என்றாலும், அதை ஆட்சேபிக்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் எந்த காலத்திலும் வழக்கு சொத்துக்களை அனுபவித்து வந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அல்லாத வேறு சொத்துக்கள் ஏதும் என் தந்தைக்கு இல்லை. கோழிப்பண்ணை சொத்தினை என் தந்தை ஏற்கனவே விற்பனை செய்துவிட்டார். அந்த சொத்தை பொறுத்து பாகம் கேட்கவில்லை.

9. தாவா சொத்து என் தந்தையின் தனிப்பட்ட சொத்து என்றாலும், அதைப்பொறுத்து என் தந்தை என் தம்பிகளுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் சட்டப்படி செல்லும் என்று சொன்னால் சரியல்ல. 5, 6 பிரதிவாதிகள் தாவா சொத்தினை கிரயம் பெற்ற நாள் முதல் அச்சொத்தில் வீடு கட்டி, வீட்டு வரி, குழாய் வரி, மின் இணைப்பு பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், அதனை நான் ஆட்சேபிக்க முடியாது என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும்,

அவர்களை மன உலைச்சலுக்கு ஆளாக்க வேண்டும் என்ற எண்ணத்திலும், உரிய காலத்திலும் இவ்வழக்கினை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் முன்னுக்குப்பின் முரணமாக காரணங்களைக்கூறி அனைத்து விஷயங்களையும் மறைத்து இத்தாவாவினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் என்னுடைய தாவா 5, 6 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**